**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.211/2023**
திரு. பழனிசாமி (D.W –1) **08.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. க.ச.எண்.378/1 தங்கமுத்து பாத்தியப்பட்ட சொத்து முதலில் அந்த சொத்தில் என்ன செய்து கொண்டு இருந்தார்கள் என்றால் பாறை ஆகத்தான் இருந்தது. அந்த சொத்துக்கள் முழுவதும் பாறையாக இருந்ததா என்றால் ஆமாம். க.ச.எண்.378/1சி சொத்தில் மட்டும் தான் பாறையாக இருந்தது மற்ற இடங்களில் தங்கமுத்து விவசாயம் பார்த்து வந்தார் என்றால் தவறு. விவசாயம் செய்யவில்லை. மழை பெய்த சமயத்தில் மாணாவாரி பயிராக சோளம் பயிரிட்டு வந்தார் என்றால் தவறு. உழவேவே ஓட்ட முடியாது. க.ச.எண்.378/1சி முதலில் தெக்கோட்டில் பாதை இருந்தது கிழமேலாக பாதை இருந்தது. அதை எல்லோரும் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் தவறு. அந்த மாதிரி ரோடு பூமியில் இல்லை. க.ச.எண்.378/1 பி சொத்தை முதலில் கிரயம் பெற்றேன். அதன் பிறகு க.ச.எண்.378/1 ஏ சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரி. அதனால் க.ச.எண்.378/1சி சொத்தை துரைசாமியிடம் இருந்து கிரயம் பெறுவதற்காக தடம் இல்லை என்று பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு. தடம் எப்போதும் பூமியில் இல்லை.

2. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து க.ச.எண்.378/1ஏ சொத்துக்களில் பாதையை பயன்பாட்டில் இல்லை. கிரயம் பெற்ற பிறகு சொத்துக்களுக்கு எதிர்ப்புறம் உள்ள சொத்தில் தடம்

வாங்கியதாக கூறுகிறார். தற்போது வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. க.ச.எண்.378 சொத்து முழுவதும் ஒரே குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால் துரைசாமிக்கு வசதி உரிமையின்படி அவர் கோரிய தாவாவின் கூறிய உள்ளபடி பாதை உரிமை உள்ளது என்றால் தவறு, பாதையே இல்லை.

3. நான் கிரையம் பெற்ற ஆவணங்களில் தடைபாத்தியம் பற்றி குறிப்புகள் உள்ளது அதை தற்போது மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல. நான் கிரயம் பெற்றபோது தடமே இல்லை. பத்திரத்தில் எழுதும்போது மாமுல் தடைபாத்தியம் என்று எழுதிவிட்டார்கள். தவறாக சாட்சியும் அளிக்கிறேன் அசல் வழக்கு எண் 211/2023 தீர்ப்பாக வேண்டும். அசல் வழக்கு எண் 323/10 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

**1.கேள்வி**

க.ச.எண்.378 நானும் துரைசாமியும் கிரையம் பெறுவதற்கு முன்பு ஒரே நபருக்கு அல்லது ஒரே குடும்பத்திற்கும் பாத்தியப்பட்டு இருந்ததா?

**பதில்**

என்னுடைய பாட்டனார் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டது.

**2. கேள்வி**

க.ச.எண்.378/1 ஏ மற்றும் க.ச.எண்.378/1 பி சொத்துக்களை யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன்?

**பதில்**

க.ச.எண்.378/1 பி சொத்து பழனிசாமியிடம் இருந்தும்.க.ச.எண்.378/1 ஏ நாச்சிமுத்துவிடம் இருந்தும் கிரையம் பெற்றேன்.

**3. கேள்வி**

பழனிசாமி,நாச்சிமுத்து ஆகியோருக்கும் முத்துசாமிக்கும் என்ன உறவு என்றால்?

**பதில்**

சகோதரர்கள்.

**4. கேள்வி**

க.ச.எண்.378 சொத்து முத்துசாமி, பழனிசாமி, நாச்சிமுத்து பாகம் பிரித்துக்கொள்டார்களா?

**பதில்**

ஆமாம். ஆனால் தடம் ஒதுக்கி சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.09 19:52:23 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.